DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Proceedure)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 78/2021
Miscellaneous :
Sessions : Pw 1
Deposition of Witness for
எதிரி ஆஜர்

| | |
|---|---|
| Name | கோவிந்தசாமி |
| Father Name | **சுப்பிராயபிள்ளை** |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 22.11.2022

**முதல் விசாரனை**

(1) **நான் தற்போது** சென்னை புரசைவாக்கத்தில் குடியிருந்து கூட்டுறவு துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். சாட்சி விநாயகத்தை தெரியாது. இறந்து போன பாஸ்கரன் எனது நண்பர் ஆவார். கடந்த 2017 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 18 ம் தேதி புரசைவாக்கத்தில் இருந்து திருவக்கரை பத்திரகாளியம்மன் கோவிலுக்கு செல்வதற்காக வேனில் நானும் எனது மனைவியும் என்னுடைய தங்கையும் மற்றும் இறந்துபோன பாஸ்கரன் சென்றோம்.

2.) மதுராந்தகம் அருகே சென்றுக்கொண்டிருந்தபோது ஒரு கோவில் அருகே எங்களுக்கு பின்னால் வந்த பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது. எனக்கு வலது காலில் முறிவு ஏற்பட்டது. என்னுடன் வந்த பாஸ்கரன் என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் எனது மனைவிக்கு லேசான காயம் ஏற்பட்டது நான் மேல்சிகிச்சைக்காக புரசைவாக்கம் தனியார் மருத்துவமனைக்கு சென்றேன். பாஸ்கரன் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக சொன்னார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

3.) விபத்து நள்ளிரவில் நடந்தது என்றால் சரிதான். நான் வேனில் தூங்கிக்கொண்டு வந்தேன். டமாள் என்று சத்தம் கேட்ட பிறகு தான் விபத்து பற்றி எனக்கு தெரியாது. விபத்து யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்று தெரியாது என்றால் பஸ் தான் டமால் என்று மோதியது. நான் பயணம் செய்த வாகனத்தின் ஓட்டுனரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான மருத்துவ சான்றுகளை போலிசாரிடம் அளித்திருக்கிறேன். இறந்து போன நபர் என்னுடைய நண்பர் என்பதால் அவருக்கு விபத்து காப்பீடு பெற்றுதருவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.